www.Padasalai.Net www.CBSEtips.in

லயோலா

# ஈசி தமிழ்

# 9

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

www.Padasalai.Net

Loyola Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 255/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

## ஆசிரியர்

**திரு. S. ஜேசுராஜ்** M.A., M.Ed.,
தமிழாசிரியர் (பணிநிறைவு)
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

**திருமதி. S. வர்கீஸ் மேரி**
தமிழாசிரியை (பணி நிறைவு)
தூய இஞ்ஞாசியர் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

## மேற்பார்வை

**மு. கெஜமுத்துமாரி,** M.A., M.Phil., B.Ed.
முதுகலைத் தமிழாசிரியை,
ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் பொன்விழா
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
சங்கர் நகர், திருநெல்வேலி

Loyola Publications



www.Padasalai.Net

# நூலினுள் புகுமுன்...

என்னருமை மாணவச் சகோதரமே! **'தமிழைத் தேன்'** என எண்ணிச் சுவைப்பது தான் தமிழுக்கு நாம் செய்யும் சிறப்பான தொண்டாகும்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல, எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும் கூட. அதே போன்று உங்கள் கைகளில் தவழும் லொயோலோ ஈசி தமிழ் உரை நூல் உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புதிய பாடத்திட்டம் மதிப்பெண்களுக்காக மட்டுமல்ல, வேலைவாய்ப்பையும் பெற்றுத் தரக்கூடிய நிலையில் மிகவும் தரமான, வளமான கருத்துகளைக் கொண்டு அமைந்துள்ளது. வாழ்க்கையை வளப்படுத்தும் பாடத்திட்டங்கள் தமிழ் ஏட்டில் சிறப்பாக அமைந்துள்ளன. தமிழில் நீங்கள் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவிக்க ஈசியான வழி, இதோ

❖ எளிய இனிய மொழிநடை

❖ கருத்துகளின் கோர்வையான அழகு

❖ மனதில் பதியும் உள் தலைப்புகள்

❖ தமிழறிவை வளர்க்கும் பல்வகைச் சிந்தனைத் துளிகள்

❖ கற்பவை கற்றபின் மனதில் அணிவகுப்பு

❖ மதிப்பீட்டு வினாக்கள்

**இவற்றை உள்ளடக்கிய அருமையான ஈசி தமிழ் ஏடு உங்கள் கைகளில்.**

**வாசியுங்கள்.... யோசியுங்கள் .... நினைவில் நிறுத்துங்கள்.**
**தேர்வுகளில் மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்



| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி | 6 |
| இயல்–1 | மொழி | திராவிட மொழிக்குடும்பம் | 8 |
| | | தமிழோவியம் | 14 |
| | அமுதென்று பேர் | தமிழ்விடு தூது* | 18 |
| | | வளரும் செல்வம் | 23 |
| | | தொடர் இலக்கணம் | 25 |
| இயல்–2 | இயற்கை, சுற்றுச்சூழல் | நீரின்றி அமையாது உலகு | 36 |
| | | பட்டமரம் | 41 |
| | உயிருக்கு வேர் | பெரியபுராணம்* | 45 |
| | | புறநானூறு* | 50 |
| | | தண்ணீர் | 53 |
| | | துணைவினைகள் | 55 |
| இயல்–3 | பண்பாடு | ஏறு தழுவுதல் | 63 |
| | | மணிமேகலை | 67 |
| | உள்ளத்தின் சீர் | அகழாய்வுகள் | 73 |
| | | வல்லினம் மிகும் இடங்கள் | 76 |
| | | திருக்குறள்* | 83 |
| இயல்–4 | அறிவியல், தொழில்நுட்பம் | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் | 90 |
| | | ஓ, என் சமகாலத் தோழர்களே!* | 96 |
| | எட்டுத்திக்கும் சென்றிடுவீர் | உயிர்வகை* | 99 |
| | | விண்ணையும் சாடுவோம் | 103 |
| | | வல்லினம் மிகா இடங்கள் | 105 |
| இயல்–5 | கல்வி | கல்வியில் சிறந்த பெண்கள் | 112 |
| | | குடும்ப விளக்கு | 116 |
| | கசடற மொழிதல் | சிறுபஞ்சமூலம்* | 119 |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை | 122 |
| | | இடைச்சொல் – உரிச்சொல் | 123 |



www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


| | | | |
|---|---|---|---|
| இயல்–6 | கலை, அழகியல், புதுமைகள் | சிற்பக்கலை | 132 |
| | | இராவண காவியம்* | 137 |
| | கலை பல வளர்த்தல் | நாச்சியார் திருமொழி | 141 |
| | | செய்தி | 144 |
| | | புணர்ச்சி | 145 |
| | | திருக்குறள்* | 152 |
| இயல்–7 | நாகரிகம், தொழில், வணிகம் நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 156 |
| | | சீவக சிந்தாமணி* | 159 |
| | வாழிய நிலனே | முத்தொள்ளாயிரம்* | 162 |
| | | மதுரைக்காஞ்சி | 166 |
| | | சந்தை | 168 |
| | | ஆகுபெயர் | 170 |
| இயல்–8 | அறம், தத்துவம், சிந்தனை | பெரியாரின் சிந்தனைகள் | 177 |
| | | ஒளியின் அழைப்பு | 181 |
| | என்தலைக் கடனே | தாவோ தே ஜிங் | 185 |
| | | யசோதர காவியம்* | 187 |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் | 189 |
| | | யாப்பிலக்கணம் | 190 |
| இயல்–9 | மனிதம், ஆளுமை | விரிவாகும் ஆளுமை | 196 |
| | | அக்கறை* | 201 |
| | அன்பெனும் அறனே | குறுந்தொகை | 203 |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை! | 206 |
| | | அணியிலக்கணம் | 207 |
| * | | கட்டுரைகள் | 214 |
| | | கடிதங்கள் | 218 |
| | | மாதிரி வினாத்தாள் | 221 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# மனப்பாடப்பகுதி

## தமிழ்விடுதூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

## பெரிய புராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

**– சேக்கிழார்**

## புறநானூறு

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

**– குடபுலவியனார்**

## திருக்குறள்

### பொறையுடைமை

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்

### கேள்வி

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

### வினைத்தூய்மை

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்

**– திருவள்ளுவர்**

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்

**– வைரமுத்து**

## உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

**– தொல்காப்பியர்**

## சிறுபஞ்சமூலம்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

**– காரியாசான்**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## இராவண காவியம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

**– புலவர் குழந்தை**

## திருக்குறள்

### குடிமை

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

### சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

### நாணுடைமை

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

### உழவு

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**– திருவள்ளுவர்**

## சீவகசிந்தாமணி

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

**– திருத்தக்கத் தேவர்**

## முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

## யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

## அக்கறை

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை

**– கல்யாண்ஜி**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் 1

## உரைநடை உலகம்

# திராவிட மொழிக்குடும்பம்

### ஒரு மதிப்பெண் வினா (பாட வினா)

### I. பலவுள் தெரிக.

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| குழு - 1 | குழு - 2 | குழு - 3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ........... | ........... | ........... | ........... |

அ) 1 - வங்கம், 2 - மானு, 3 - தாழிசை, 4 - பிறவினை
ஆ) 1 - தாழிசை, 2 - மானு, 3 - பிறவினை, 4 - வங்கம்
இ) 1 - பிறவினை, 2 - தாழிசை, 3 - மானு, 4 - வங்கம்
ஈ) 1 - மானு, 2 - பிறவினை, 3 - வங்கம், 4 - தாழிசை

**விடை: அ) 1 - வங்கம், 2 - மானு, 3 - தாழிசை, 4 - பிறவினை**

### கூடுதல் வினா

2. தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் _________ என்ற சொல் பிறந்தது என்பர் மொழி ஆராய்ச்சியாளர்கள்.
அ) தெலுங்கு ஆ) துளு இ) திராவிடா **விடை: இ) திராவிடா**

3. தற்போதுள்ள திராவிட மொழிகள் மொத்தம் _________.
அ) 28 ஆ) 26 இ) 24 **விடை: அ) 28**

4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதப்பட்ட ஆண்டு _________.
அ) 1816 ஆ) 1856 இ) 1836 **விடை: ஆ) 1856**

5. தென்னிந்திய மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டவர் _______.
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) ஹோக்கன் இ) கிரிம் **விடை: ஆ) ஹோக்கன்**

6. திராவிட மொழிக்குடும்பம் நில அடிப்படையில் _________ வகைப்படுத்தப்பட்டுள்ளது.
அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று **விடை: இ) மூன்று**

7. திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுவது _________.
அ) தமிழ் ஆ) சமஸ்கிருதம் இ) தெலுங்கு **விடை: அ) தமிழ்**

8. திராவிடம் என்ற சொல்லை முதன்முதலில் குறிப்பிட்டவர் _________.
அ) குமரிலப்பட்டர் ஆ) ஹீராஸ் பாதிரியார் இ) கால்டுவெல் **விடை: அ) குமரிலப்பட்டர்**

9. 'கண்' என்னும் சொல் மலையாளத்தில் _________ என்று வழங்கப்படும்.
அ) கண்னு ஆ) கண்ணு இ) கெண் **விடை: ஆ) கண்ணு**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதன் கண்டுபிடித்த கருவியே ________ ஆகும் **விடை: மொழி**
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலை எழுதியவர் _________. **விடை: கால்டுவெல்**
3. சொற்களின் முக்கியப் பகுதியான 'வேர்ச்சொல்' என்பது ________ எனப்படும். **விடை: அடிச்சொல்**
4. வடமொழி ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என்று கூறியவர் ________. **விடை: அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்**
5. பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலானோரால் மொழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு _________. **விடை: 1816**
6. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் _________ மூலம் என்ற கருத்து நிலவியது. **விடை: வடமொழி**
7. திராவிட மொழிகளை ஒரே இனமாகக் கருதி அவற்றிற்கு ________ எனப் பெயரிட்டார் பிரான்சிஸ் எல்லிஸ். **விடை: தென்னிந்திய மொழிகள்**
8. திராவிட மொழிகள் நான்கினையும் ஒப்புமைப்படுத்தி முதன்முதலில் கருத்து தெரிவித்தவர் _________. **விடை: பிரான்சிஸ் எல்லிஸ்**
9. தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் - என்று கூறியவர் _________. **விடை: கால்டுவெல்**
10. மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் __இடம்பெற்றுள்ளது. **விடை: தமிழ்மொழி**

## III. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

1. திராவிட மொழிகளுக்கென சில பொது பண்புகூறுகள் உள்ளன.
   விடை: திராவிட மொழிகளுக்கென சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன.
2. ஒரேபொருளை குறிக்க பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்ப பெற்ற மொழி தமிழ்.
   விடை: ஒரேபொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ்..
3. காலந்தோறும் தன்னை புதுப்பித்து கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ் மொழி விளங்கிவருகிறது.
   விடை: காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.
4. தமக்கு தோன்றிய கருத்துகளை பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழி.
   விடை: தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழி.
5. திராவிட மொழிகளின் தாய்மொழியாக கருதபடுவது தமிழ்.
   விடை: திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுவது தமிழ்.

## IV. விடைக்கேற்ற வினா அமைக்க.

1. தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடைய மொழி தமிழ்.
   விடை: தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடைய மொழி எது?
2. தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.
   விடை: தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவி எது?
3. தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள்.
   விடை: தென்திராவிட மொழிகள் யாவை?
4. திராவிட மொழிகளின் மூத்த மொழியாய் இலங்குவது தமிழ்.
   விடை: திராவிட மொழிகளின் மூத்த மொழியாய் இலங்குவது எது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலைக் கால்டுவெல் எழுதியுள்ளார்.
**விடை:** திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்?

## V. தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.

1. முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள் சைகைகள் ஒலிகள் ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.
**விடை:** முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.

2. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ் கன்னடம் மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் ஆகும்.
**விடை:** திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் ஆகும்.

## VI. குறு வினா (பாட வினா)

1. **நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**
திராவிடக்குடும்பத்தில் உள்ள தமிழ் மொழியே நான் பேசும் மொழி.
**சிறப்புத்தன்மை**
✦ பழைமையும் இலக்கண இலக்கியவளமும் உடைய மொழி தமிழ்.
✦ திராவிட மொழிகளின் தாய் மொழியாகக் கருதப்படுகிறது தமிழ்.

## கூடுதல் வினாக்கள்

1. **மொழி என்றால் என்ன?**
தமக்குத் தோன்றிய கருத்துகளைத் தெரியப்படுத்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.

2. **திராவிட மொழிகள் யாவை?**
தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகியவை திராவிடப் பெருமொழிகள் ஆகும்.

3. **திராவிட மொழிக்குடும்பம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?**
➢ திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
➢ அவை, தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள்.

4. **திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்?**
எமினோ, ஸ்டென்கனோ, பரோ, எமினோ, சுவலபில், ஆந்திரனோவ், கே.வி.சுப்பையா, எஸ்.வி.இராமசாமி, தெ.பொ.மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களாவர்.

## VII. சிறு வினாக்கள் (பாட வினாக்கள்)

1. **திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**மொழிக்குடும்பம்**
உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**திராவிட மொழிக்குடும்பம்**
மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
இந்த மொழிகளில் எனக்குத் தெரிந்த மொழிகள் தமிழ், தெலுங்கு ஆகும். அவற்றின் சிறப்பியல்புகளைக் காண்போம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தமிழ்:** இன்பத்தமிழ், அமுதத்தமிழ், முத்தமிழ் எனப் போற்றப்படும் தமிழானது உலகில் பல நாடுகளில் பேசப்பட்டு வருகிறது. உலகிலேயே அதிக இலக்கண, இலக்கிய நூல்களைப் பெற்றது தமிழ்.

**தெலுங்கு:** "சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப்போம்" எனப் பாரதியாரால் சிறப்புப் பெற்றது தெலுங்கு. அற இலக்கியங்கள் பல பெற்ற சிறப்புடையது தெலுங்கு மொழி.

**2. 'மூன்று' என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?**

**பொதுவான அடிச்சொற்கள்**

திராவிட மொழிகளுக்கென சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. சொற்களின் முக்கியப் பகுதியான வேர்ச்சொல் என்பது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

**எண்ணுப் பெயர்கள்**

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| மூன்று | - | தமிழ் |
| மூணு | - | மலையாளம் |
| மூடு | - | தெலுங்கு |
| மூரு | - | கன்னடம் |

**3. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

- நம் தமிழ்மொழி, முன்னைப் பழைமைக்குப் பழைமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்டது.
- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.
- மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகின்றது.
- தன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.
- தமிழ்மொழி காலப் புதுமையைப் பெறத்தக்க வல்லது. கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றதாய் அமைந்துள்ளது.

## கூடுதல் வினாக்கள்

**1. மொழி எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்தது?**

- தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.
- முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.
- இவற்றின் மூலம் பருப்பொருள்களை மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது.
- நுண்பொருள்களை உணர்த்த இயலவில்லை. அதனால், ஒலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்த்துப் பொருள் உணர்த்திய ஒலி, காலப் போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.

**2. தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

**உலகமொழி**

- தமிழ் தொன்மையும், இலக்கண இலக்கிய வளமும் உடைய மொழி.
- இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிசியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், திரினிடால், ஆஸ்திரேலியா, கனடா முதலான நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.

**சிறப்பான மொழி**

- ஏனைய திராவிட மொழிகளை விடவும் தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி தமிழ்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- திராவிட மொழிகளுள் பிற மொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழ்.
- தமிழ் மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

**சொல்வளச் செழுமை**

- ஒரே பொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ்.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

**புதியன புகுதல்**

- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றுள்ளன.
- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.
- தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகளைப் பேணிப் பாதுகாப்பதுடன், தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் விளங்கி வருகிறது.

## VIII. நெடு வினா ( பாட வினா )

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

**மொழிக்குடும்பம்**

- மனித இனம் வாழ்ந்த இடஅமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளால் பல மொழிகள் உருவாயின.
- உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- அவற்றுள் ஒன்று திராவிட மொழிக்குடும்பம்.

**திராவிடம்**

- தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் 'திராவிடா' என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- ஹீராஸ் பாதிரியார், இம்மாற்றத்தைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகிறார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

1856 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து மாறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

**ஆய்வாளர்கள்**

கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எஸ்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**தலைமைச் சிறப்பு**

- திராவிட மொழிகள் அனைத்திற்கும் மூலமொழியாகத் திகழ்வது தமிழ்மொழி. ஏனைய திராவிட மொழிகள் தமிழிலிருந்து தோன்றி வளர்ந்தவை.
- எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிடமொழி, தமிழ். இத்தகு தலைமைச் சிறப்பு வாய்ந்தது நம் தமிழ்மொழி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கால்டுவெல்**

திராவிட மொழிகளுக்குள்ளே மிகப் பழைய காலத்திலேயே திருந்திய நிலை பெற்றதும், நனி மிக நாகரிகம் உடையதாக ஆக்கப் பெற்றதும், பல வகையில் அவ்வின மொழிகளின் பிரதிநிதியாகவும் விளங்குவது தமிழ் மொழி எனக் கால்டுவெல் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## கூடுதல் வினா

**1. திராவிட மொழிக்குடும்பத்தின் வகைகள், அவ்வகையைச் சார்ந்த மொழிகள் பற்றியும் விவரிக்க.**

**திராவிடம்**

- கி.மு.3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த இந்திய நாகரிகமே திராவிட நாகரிகம் எனப்பட்டது.
- திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும்.
- குமரிலப்பட்டர் 'திராவிடம்' என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கினார்.
- திராவிடமொழி, திராவிட இனம், திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது என்பார் கால்டுவெல்.

**திராவிடமொழிக்குடும்பம்**

- திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட, வடதிராவிட, நடுத்திராவிட மொழிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள்.
- கூயி, தெலுங்கு, முண்டா முதலானவை நடுத்திராவிட மொழிகள்.
- பிராகுயி, மால்தோ முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

| தென்திராவிடம் | நடுத்திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ் | தெலுங்கு | குரூக் |
| மலையாளம் | கூயி | மால்தோ |
| கன்னடம் | கூவி (குவி) | பிராகுய் (பிராகுயி) |
| குடகு (கொடகு) | கோண்டா | |
| துளு | கோலாமி (கொலாமி) | |
| கோத்தா | பெங்கோ | |
| தோடா | முண்டா | |
| கொரகா | பர்ஜி | |
| இருளா | கதபா | |
| | கோண்டி | |
| | கோயா | |

**பிறமொழிகள்**

- மேலுள்ள பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

**தமிழினியன் -** தமிழ் இனியது. தமிழை நான் பேசுவதால் தமிழினியன் என அழைக்கப்படுகிறேன். தமிழ் என்னோடு இருப்பதால் நான் இனிமையுடையவனாக இருக்கிறேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அன்பு சீராளன்** - தமிழில் மிக இனிய வார்த்தை அன்பு. உயிர், மெய், உயிர்மெய் ஆகிய மூன்றும் இணைந்த வார்த்தை. அன்பைச் சீராகக் கொண்டு ஆளக்கூடியவன்.

**தமிழ்த்தென்றல்** - தமிழ் தென்றலைப் போல சுகம் அளிக்கக் கூடியது. இதமான இன்பத்தைத் தரக்கூடியது. தென்றல் போலத் தமிழைத் தவழச் செய்வதனால் என் பெயர் தமிழ்த்தென்றல்.

**தேன்மொழி** - தேன் சுவை மிக்கது. அது போல மொழியும் சுவையானது. தேன் போன்ற சுவை மிகுந்த, நலம் தரக்கூடிய மொழியைப் பேசுவதால் என் பெயர் தேன்மொழி.

2. **பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

(எ.கா) செய் - செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.

- வா - வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வருவீர், வருகிறோம்.
- போ - போனார்கள், போகிறார்கள், போவார்கள், போன, போகிறோம்.

## இயல் 1

### கவிதைப் பேழை

## தமிழோவியம்

ஈரோடு தமிழன்பன்

### ஒரு மதிப்பெண் வினா (பாட வினா)

### I. பலவுள் தெரிக.

1. “காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!” ..... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் -.

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

### கூடுதல் வினா

1. **தமிழோவியம் என்னும் கவிதை நூலின் ஆசிரியர் ____.**

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) குமரிலப்பட்டர் இ) ச.அகத்தியலிங்கம் ஈ) கால்டுவெல்

**விடை : அ) ஈரோடு தமிழன்பன்**

2. **விரலை மடக்கியவன் இசையில்லை என்பது ____.**

அ) புல்லாங்குழல் ஆ) வீணை இ) மத்தளம் ஈ) தவில்

**விடை : ஆ) வீணை**

### II. பொருள் தருக

அகமாய் - அகப்பொருள் இலக்கியங்கள்
புறமாய் - புறப்பொருள் இலக்கியங்கள்
நெஞ்சம் - உள்ளம்
தீபம் - ஒளி
கோலம் - வடிவம்

### III. பிரித்து எழுதுக

பூவனங்கள் - பூ + வனங்கள்
இருட்டென - இருட்டு + என
தாயெனவே - தாய் + எனவே
இசையில்லை - இசை + இல்லை
தீதறுக்கும் - தீது + அறுக்கும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. இலக்கணக் குறிப்புத் தருக.

எத்தனை எத்தனை, விட்டு விட்டு - அடுக்குத்தொடர்கள்
தமிழே! - விளித்தொடர்
பூவனங்கள் - உவமைத் தொகை
காலமும் - முற்றும்மை

## V. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக் கொண்டு நிரப்புக

1. நிகரி ________ (லா, ளா) காப்பியப் பூவ________ (ன, ண) ங்கள்.

**விடை: நிகரிலாகாப்பியப் பூவனங்கள்**

2. புதுக்கோ________ம் (ல, ள) பு________ந்து (னை, ணை) தமிழ் வ________ர்ப்பாய் (ள, ல)

**விடை: புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்**

3. மா________ட (னி, ணி) மே________மையைச் (ன், ண்) சாதித்திடக் கு________ள் (ர, ற) மட்டும் போதுமே.

**விடை: மானிட மேன்மையைச் சாதித்திடக் குறள்**

## VI. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மானிட மேன்மையைச் சாதித்திட __________ மட்டும் போதுமே. **விடை: குறள்**
2. சாகித்திய அகாதமி விருதுபெற்ற ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல் ______. **விடை: வணக்கம் வள்ளுவ**
3. கைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை எழுதியவர் __________. **விடை: ஈரோடு தமிழன்பன்**
4. __________ சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்கோலம் புனைந்து வாழ்வோம். **விடை: குறைகள்**
5. “இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்.” - என்று கூறும் நூல் ______. **விடை: பிங்கல நிகண்டு**
6. “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்” - என்றவர் ______. **விடை: பாரதியார்**
7. உலகத் தாய்மொழி நாள் _____. **விடை: பிப்ரவரி 21**
8. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் _____, _____. **விடை: இலங்கை, சிங்கப்பூர்**

## VII. பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) வளர்ப்பாய்= வளர் + ப் + ப் + ஆய்
வளர் - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

ஆ) புனைந்து = புனை + த்(ந்) + த் +உ
புனை - பகுதி, த் - சந்தி த், ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## VIII. குறு வினாக்கள் (பாட வினாக்கள்)

1. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

“காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!”

உலகம் தோன்றிய நாள்முதல் தோன்றிய தமிழ்மொழி இன்று வரை நிலைத்து நிற்பதோடு நில்லாமல் நாளும் வளரும் தமிழாய் உயர்ந்திருக்கின்றது நம் தமிழ் மொழி என்பதே என்னை ஈர்த்த அடிகள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**

➢ காலத்தினால் அழியாத நிலைபெற்று நிற்கும் தமிழ்மொழியானது அக இலக்கியமாகவும், புற இலக்கியமாகவும் வளர்ந்து தமிழை வளப்படுத்தியது.

➢ அவ்விலக்கியங்கள் நவிலும் வண்ணம் இலக்கணங்கள் இனிக்கும் தன்மையுடையவை.

## கூடுதல் வினாக்கள்

**1. ஈரோடு தமிழன்பன் – ஆசிரியர் குறிப்புத் தருக**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ஜெகதீசன் |
| பெற்றோர் | - | நடராசன், வள்ளியம்மாள் |
| ஊர் | - | கோவை மாவட்டம், சென்னிமலை |
| புனைபெயர் | - | விடிவெள்ளி |
| நூல்கள் | - | தோணி வருகிறது, விடியல் பொழுதுகள், சூரியப் பறவைகள், நத்தனை எரித்த நெருப்பின் மிச்சம், காலத்திற்கு ஒரு நாள் முந்தி, ஒரு வண்டி சென்ரியு, வணக்கம் வள்ளுவ |

**2. தமிழோவியம் – நூற்குறிப்பு எழுதுக.**

➢ ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' இயற்கை அழகை இனிதே காட்டும் காவியம்.

➢ ஒரு பூவின் அழகையும் ஒரு குழந்தையின் புன்சிரிப்பையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவையில்லை இதிலுள்ள பாடலும் அப்படித்தான்.

➢ இந்நூல் கவிதை உலகின் எழிலோவியமாகத் திகழ்கின்றது.

**3. மானுடத்தின் மகத்துவத்தைச் சாதித்துக் காட்ட எது மட்டும் போதும்?**

➢ மானுடத்தின் மகத்துவத்தைச் சாதித்துக் காட்டத் திருக்குறள் ஒன்றே போதும்.

➢ திருவள்ளுவரின் திருக்குறளைக் கற்று, அதன் வழியில் வாழ்ந்தாலே போதும். மானுடத்தின் மேன்மையை அடையலாம்.

**4. ஏன் குறைகள் சொல்வதை விட்டுவிடவேண்டும்?**

➢ விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை பொழிய முடியாததைப் போல

➢ பிறர் குற்றம் குறைகளை வீணாய்ப் பேசுவதைத் தவிர்த்து விட்டு, புதிய புதிய வடிவங்களில் இலக்கியங்கள் படைத்துத் தமிழை நாம் வளர்க்கப் பாடுபடவேண்டும்.

## IX. சிறுவினா (பாட வினா)

**1. "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

➢ விரலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று சொல்வது போல் பிறரைக் குறைசொல்வதை விட்டுவிட்டுப் புதுவடிவிலும் புதுப் பொலிவுடனும் இலக்கியங்களைப் படைத்துத் தமிழை வளர்ப்போம்.

➢ முத்தமிழாய் இருக்கும் நற்றமிழை, அறிவியல் தமிழாய், கணினித் தமிழாய், இணையத்தமிழாய், வணிகத்தமிழாய்ப் புதுவடிவில் வளர்த்தெடுப்போம்.

➢ மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை, தொழில்நுட்பத் துறை போன்ற புதிய துறைகளில் புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கித் தமிழை மேலும் தளிர்க்கச் செய்வோம்.

## X. நெடுவினா (கூடுதல் வினா)

**1. தமிழோவியம் என்னும் கவிதை மூலம் ஈரோடு தமிழன்பன் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**அழியாத் தமிழ்**

➢ காலம் பிறப்பதற்கு முன்பே தனிச்சிறப்புடன் பிறந்ததே நம் தமிழ்மொழி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- எக்காலத்திற்கும் அழியாத தன்மை கொண்டு என்றும் நிலைத்து நிற்கக் கூடியது.
- வாழ்வியல் நெறிமுறைகளைப் போற்றிக் காக்கும் அறம், புறம் பற்றிய இலக்கியங்கள்.
- இவ்விலக்கியங்களில் தமிழர் வாழ்வை வகுத்துக்காட்டிய இலக்கணங்கள் இனிமையும் எளிமையும் கொண்டு விளங்குகின்றன.

**வளம் செழிக்கும் சோலை**

தனக்கு நிகர் வேறொன்றும் இல்லாத காப்பியங்கள் இம்மொழியில் பூக்கள் நிறைந்த சோலையாக வளங்கொழித்து நம் இதயங்களில் ஊர்வலங்களை நடத்தி வருகின்றன.

**புதிய தீபம்**

- அறியாமை என்னும் இருட்டினிலே நாம் ஏன் வாழ வேண்டும் என்று கேட்கும் தமிழர்கள் வாழ்வில் இருள் நீங்க, ஒளியாய் நீதிப்பாடல்கள் அமைந்துள்ளன.
- மானுடத்தின் மகத்துவத்தைச் சாதித்துக் காட்டத் திருக்குறள் நூல் ஒன்றே போதும்.
- திருக்குறளைக் கற்று, அதன் வழியில் வாழ்ந்தாலே போதும். மானுடத்தின் மேன்மையை அடையலாம்.

**புதிய சிந்தனை**

- எத்தனை எத்தனையோ எண்ணிலடங்காத சமயங்களை இப்பாரினில் ஏந்தி வளர்த்த பெருமை தமிழுக்கே உண்டு.
- சித்தர்களும் மற்றவர்களும் சமுதாயத்தின் தீமைகளை அறுக்கின்ற, புத்தம் புதுச் சிந்தனைகளை நித்தம் நித்தம் நம் இதயங்களில் பாய்ச்சுகின்றனர்.

**புதிய வடிவம்**

- விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை பொழிய முடியாததைப் போல, பிறர் குற்றம் குறைகளை வீணாகப் பேசுவதை விட்டுவிட்டு, புத்தம் புதிய வடிவம் பெற்ற தமிழை நாம் அனைவரும் ஒன்று கூடி வளர்த்திடுவோம்.

## XI. அணி இலக்கணம்

1. **“விரலை மடக்கியவன் இசையில்லாமல் – எழில் வீணையில் என்று சொல்வது போல்” – இதில் பயின்று வரும் அணியைச் சுட்டுக.**

இப்பாடலில் உவமை அணி பயின்று வந்துள்ளது

**அணி இலக்கணம் :** உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையே உவம உருபு வெளிப்படையாக அமைவது உவமை அணி எனப்படும்.

**எ.கா.:**

“விரலை மடக்கியவன் இசையில்லாமல் - எழில்
வீணையில் என்று சொல்வது போல்”

**விளக்கம் :** விரல்களை மடக்கிக்கொண்டால் வீணையில் இசை வராததைப் போல் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் புது வடிவுடன் தமிழை நாம் வளர்க்க இயலாது.

**அணிப் பொருத்தம் :** இப்பாடலில், ‘போல’ - என்ற உவமஉருபு வெளிப்படையாக வந்துள்ளதால் உவமை அணி பயின்று வந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

1. **பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

அன்னைத்தமிழே! அருமைத்தமிழே! இனிய தமிழே! அமுதத் தமிழே! உன் பெருமையெல்லாம் நினைக்கும் தோறும் என் உள்ளமெல்லாம் இன்ப வெள்ளம் இனிதே பாய்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



காலமெல்லாம் அழியாமல் கன்னித் தமிழாய் என்றும் விளங்கும் உன் இளமையை என்னென்று புகழ்வது!

எண்ணில்லாத இலக்கியங்களை உன் வளமாய்க் கொண்டு திகழும் உன் இலக்கியவளம் மிக்க மொழி உலகினில் வேறெதும் உண்டோ!

அகத்திற்கும் புறத்திற்கும் இலக்கணம் வகுத்து, வாழ்வியலையும் புது வரலாறு படைத்த உன் இலக்கணச் சிறப்பை என்னென்று புகழ்வது!

தமிழே நீ வாழ்க! வளர்க! காலமெல்லாம் கடந்து என்றும் புதுமையாய், என்றும் வளமையாய் என்றும் இளமையாய் என்றும் நீ வாழ்வாயாக!

---

**2. கவிதையைத் தொடர்க**

**அன்னை சொன்ன மொழி**
**ஆதியில் பிறந்த மொழி**
**இணையத்தில் இயங்கும் மொழி**
**ஈடிலாத் தொன்மை மொழி**
**உலகம் போற்றும் மொழி**
**ஊர்கூடி வியக்கும் மொழி**
என்றும் இளமையான மொழி
ஏங்கும் தமிழரின் விடியல் மொழி
ஐயம் அகற்றும் அருமைமொழி
ஒற்றுமையை உயர்த்திடும் உயர் மொழி
ஓங்குபுகழ் விளங்கும் மொழி
ஔவைநீதி போற்றும் அருமை மொழி
அஃதே உயர்தனிச் செம்மொழி

# இயல் 1

## கவிதைப் பேழை

## தமிழ்விடு தூது

### ஒரு மதிப்பெண் வினா (பாட வினாக்கள்)

### I. பலவுள் தெரிக.

1. தமிழ் விடு தூது __________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
**விடை: இ) சிற்றிலக்கியம்**

2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக
அ) __________ இனம் ஆ) வண்ணம் __________
இ) __________ குணம் ஈ) வனப்பு __________
க. மூன்று, நூறு, பத்து, எட்டு உ. எட்டு, நூறு, பத்து, மூன்று
ங. பத்து, நூறு, எட்டு, மூன்று ச. நூறு, பத்து, எட்டு, மூன்று
**விடை: க. மூன்று, நூறு, பத்து, எட்டு**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



3. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி, - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

## கூடுதல் வினாக்கள்

1. 'சந்து இலக்கியம்' என அழைக்கப்படுவது _____ .
அ) தூது ஆ) குறம் இ) பள்ளு **விடை: அ) தூது**

2. தமிழ்விடு தூதில் அமைந்துள்ள கண்ணிகளின் எண்ணிக்கை ____________ .
அ) 286 ஆ) 256 இ) 268 **விடை: இ) 268**

3. சிற்றிலக்கியங்கள் __________ வகைப்படும்.
அ) 16 ஆ) 96 இ) 26 **விடை: ஆ) 96**

4. தமிழ்விடு தூது __________ பாவினால் பாடப்பட்டது.
அ) கலிவெண்பா ஆ) ஆசிரியப்பா இ) சிந்துப்பா **விடை: அ) கலிவெண்பா**

5. வனப்பு என்பதன் பொருள் __________.
அ) சோம்பல் ஆ) அழகு இ) வானம் **விடை: ஆ) அழகு**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. 'வாயில் இலக்கியம்' என அழைக்கப்படுவது __________. **விடை: தூது இலக்கியம்**
2. தமிழ்விடுதூது __________ மீது காதல் கொண்ட பெண் தன் காதலைக் கூறிவருமாறு அமைந்துள்ளது. **விடை: சொக்கநாதர்**
3. தூது ______ வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. **விடை: தொண்ணூற்றாறு**
4. இராசசம், சத்துவம் __________ ஆகிய மூன்றும் முக்குணங்களாகும். **விடை: தாமசம்**
5. துறை, தாழிசை, விருத்தம் ஆகிய மூன்றும் __________ ஆகும். **விடை: பாவினங்கள்**
6. 'முத்திக் கனியே' எனத்தமிழைப் புகழும் நூல் __________ **விடை: தமிழ் விடுதூது**
8. 'சோம்பல்' எனப் பொருள் தரும் சொல் __________ **விடை: தாமசம்**

## III. பொருள் தருக

விளம்புதல் - கூறுதல்
புத்தி - அறிவு
திறம் - சிறப்பு
ஊனம் - குறைபாடு
வனப்பு - அழகு
செவி - காது

## IV. பிரித்து எழுதுக

தெள்ளமுதாய் - தெள் + அமுதாய்
உவந்துரைக்கும் - உவந்து + உரைக்கும்
முக்குணம் - மூன்று + குணம்
மற்றொருவர் - மற்று + ஒருவர்
ஆறல்லால் - ஆறு + அல்லால்
நவரசம் - நவம் + இரசம்

## V. விரித்து எழுதுக

முத்தமிழ் - இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
மூவினம் - துறை, தாழிசை, விருத்தம்
முக்குணம் - சத்துவம், இராசசம், தாமசம்
ஐவண்ணம் - வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அறுசுவை - இனிப்பு, கசப்பு, புளிப்பு, கரிப்பு, துவர்ப்பு, கார்ப்பு
எண்வனப்பு - அம்மை , அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு

## VI. இலக்கணக்குறிப்புத் தருக.

முத்திக்கனி - உருவகம்,
தெள்ளமுது - பண்புத்தொகை - குற்றமிலா, சிந்தாமணி
- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்,
நா - ஓரெழுத்து ஒருமொழி - செவிகள் உணவான
- நான்காம் வேற்றுமைத் தொகை.

## VII. பகுபத உறுப்பிலக்கணம் தருக

**1. கொள்வார் – கொள் + வ் + ஆர்**
கொள் - பகுதி,
வ் - எதிர்கால இடைநிலை,
ஆர் - பலர் பால் வினைமுற்று விகுதி

**2. உணர்ந்த – உணர் + த்[ந்] + த் + அ**
உணர் - பகுதி, த்- சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த் - இறந்தகால இடைநிலை;
அ - பெயரெச்ச விகுதி

## VIII. குறு வினாக்கள் [பாட வினாக்கள்]

**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

- கண்ணி - இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதே போல் தமிழில் பூக்கண்ணி போல் இரண்டிரண்டு அடிகளில் எதுகையால் தொடுக்கப்படுவது கண்ணி ஆகும்.
- தமிழ்விடு தூதுப்பாடல்கள் கண்ணி வகையில் அமைந்துள்ளன.
- தாயுமானவர் எழுதிய பராபரக்கண்ணியும் இவ்வகையே ஆகும்.
- குணங்குடி மஸ்தான் சாகிபு எழுதிய எக்காலக்கண்ணி, மனோன்மணியக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணியும் இவ்வகைப் பாடல்களாகும்.

**2. கண்ணி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

- தலையிலணியும் பூமாலை (பூங்கொத்து)
- கயிற்றுச் சுருக்கு (வலை)
- இரண்டடிச் செய்யுள் (பாடல்)
- அங்கயற்கண்ணி (பெண்)
- குவளைக்கண்ணி (ஊர்)

## கூடுதல் வினாக்கள்

**1. பத்துக்குணங்கள் யாவை?**

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகியன பத்துக்குணங்கள் ஆகும்.

**2. தமிழ்விடுதூது யார் மீது பாடப்பட்டது?**

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழைத் தூது விடுவதாக அமைந்ததே தமிழ்விடுதூது ஆகும்.

**3. எண்வகை வனப்புகள் யாவை?**

அம்மை, அழகு, தொன்மை, தோல் , விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியன எட்டும் வனப்புகள் ஆகும் எனத் தமிழ்விடுதூது கூறுகின்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## IX. சிறு வினா (கூடுதல் வினா)

1. **தமிழ்விடு தூது நூற்குறிப்பு எழுதுக**
   - தமிழில் உள்ள 96 வகைச்சிற்றிலக்கியங்களுள் ஒன்று தூது இலக்கியம்.
   - இது வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
   - தூது இலக்கியங்களுள் ஒன்று தமிழ்விடுதூது ஆகும்.
   - இந்நூலின் ஆசிரியர் யாரென அறிந்து கொள்ள இயலவில்லை.
   - தமிழ்விடுதூது மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ் மொழியைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.
   - கலிவெண்பாவால் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன,
   - தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் 268 கண்ணிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## X. நெடு வினா (பாட வினா)

2. **தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

   **தூது**
   - கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி, நெஞ்சம், தென்றல் என்று பல தூது வாயில்களைப் பற்றி அறிந்திருக்கிறோம்.
   - தமிழைத் தூதுப் பொருளாக்கி அதன் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு, சுவை, அழகு, திறம், தகுதி ஆகியவை தமிழ்விடுதூது மூலம் விளக்கப்படுகிறது,

   **விண்ணப்பம்**
   - தமிழ் அமிழ்தமாகவும், வீடுபேற்றைத் தரும் கனியாகவும், இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்குகின்றது.
   - அறிவால் உண்ணப்படும் தேனாக விளங்கும் தமிழே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோளினைக் கேட்பாயாக.

   **பெருமை**
   - உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களும், தாழிசை, துறை, விருத்தம் போன்ற மூவகைப் பாவினங்களிலும் புலவர்கள் பாடக் கைவரப் பெற்றவர்கள்.
   - சிந்தாமணியாய் இருக்கும் உன்னைச் சிந்து என்று அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு கூறிய நா இற்று விழும் அன்றோ!

   **குணங்கள்**
   - வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூடச் சத்துவம், இராசதம், தாமசம்,என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.
   - ஆனால், நீயோ செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளாய்.

   **வண்ணங்கள்**
   - மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்கு மேல் இல்லை.
   - நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

   **சுவைகள்**
   - நாவின் மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை.
   - நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்.

   **அழகு**
   - தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய். எனவே, தமிழே தூது அனுப்பச் சிறந்தது என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்ற பின்

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக**

ஒருவர் பேசுவதை நாம் புரிந்து கொள்ளவும், நாம் பேசுவதைப் பிறர் புரிந்து கொள்ளவும் உதவுவது மொழியாகும். நம் எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாகவும் தெளிவாகவும், இனிதாகவும் எடுத்துரைக்க உதவுவது நம் தமிழ்மொழியேயாகும்.

அயல்மொழியில் நம் கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைக்க இயலாது. எடுத்துரைத்தாலும் மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால் தான் தாய்மொழியே தரணியில் உயர்ந்த மொழி. தாய்மொழியே தாயினும் சிறந்த மொழி என்று போற்றப்படுகிறது.

நம் எண்ணங்களை ஆற்றோட்டம் போல் தங்கு தடையில்லாமல் எடுத்துரைக்கத் தாய்மொழியே நமக்கு உதவுகிறது. இடை இடையே எவ்வித இடையூறில்லாமல் முழு சுதந்திரத்துடன் செயல்பட நமக்கு உறுதுணை புரிவது தமிழேயாகும்.

அம்மா என்ற தலைப்பில் தமிழ்மொழியில் கட்டுரை எழுதுவதற்கும் அயல்மொழியில் எழுதுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. அயல்மொழி தட்டுத் தடுமாறித் தெளிவில்லாத நிலையில் முடியும். ஆனால் தமிழ் மொழியோ அருமையாக, அழகாக இனிமையாக, வளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தன்னிகரில்லாத் தமிழே!
தரணியில் நீ என்றும் உயர்வே!
அவனியெங்கும் ஆர்ப்பரிக்கும் தமிழே!
ஆதவன் போல் உயர்ந்தோங்குவாய் தமிழே!

---

**2. படித்துத் திரட்டுக**

காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க

- கவியோகி சுத்தானந்த பாரதியார்

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

**இலக்கியங்கள் :**

- குண்டலகேசி
- வளையாபதி
- சீவக சிந்தாமணி
- மணிமேகலை
- சிலப்பதிகாரம்
- சூளாமணி
- திருக்குறள்

## கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

**1. தித்திக்கும் தெள் அமுதாய்த் தெள் அமுதின் மேலான**
**முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்**
**உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்**

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெறும் நூல் எது?**
தமிழ்விடுதூது

2. **இப்பாடலினை இயற்றியவர் யார்?**
ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை

3. **முத்தமிழ் - விரித்து எழுதுக.**
இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

4. **உவந்துரைக்கும் - பிரித்து எழுதுக.**
உவந்து + உரைக்கும்

5. **விளம்பக்கேள் - பொருள் கூறுக.**
கூறுவதைக் கேட்பாயாக

6. **தித்திக்கும் தெள்ளமுதாக விளங்குவது எது?**
தமிழ்

7. **புத்திக்குள் உண்ணப்படும் தேனாக அமைவது யாது?**
தமிழ்

8. **இப்பாடலின் அடி எதுகையை எடுத்தெழுதுக.**
தித்திக்கும் - முத்திக்
உண்ணப் - விண்ணப்பம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **குறம் என்றும் பள்ளு என்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உணவு என்று மூன்றுஇனத்தும் உண்டோ– திறம்எல்லாம்**
**வந்து என்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்**
**சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரமேல்**

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெறும் நூல் எது? -** தமிழ்விடுதூது
2. **இப்பாடலை இயற்றியவர் யார்? -** ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை
3. **இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள சிற்றிலக்கியங்கள் யாவை? -** குறவஞ்சி, முக்கூடற்பள்ளு
4. **சிந்தாமணி - இலக்கணக்குறிப்புத் தருக. -** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
5. **மூவகைப் பாவினங்கள் யாவை? -** துறை, தாழிசை, விருத்தம்
6. **இப்பாடலின் அடிஎதுகையை எடுத்தெழுதுக. -** குறம், உறவு, வந்து, சிந்து

# இயல் 1

**விரிவானம்**

## வளரும் செல்வம்

### I. நெடுவினா

**I. "வளரும்செல்வம்" உரையாடல் மூலம் நீ அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

தமிழ் மொழி பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்பதில்லை என்பது மரபு. அந்த வகையில் கலைச் சொல்லாக்கத்திற்கான பணிகள் இன்று முதன்மை பெற்றுள்ளன. இதுவே மொழி வளர்ச்சிக்கான வாயிலாகவும் உள்ளது. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு, ஆகியவற்றை இத்துணைப்பாடத்தின் வழிக்காண்போம்.

**தமிழெண்கள்:** கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கையிலான தமிழ்ச்சொற்கள் நமக்குத் தெரியும். ஆனால் 1/320, 1/160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான சொற்களான முந்திரி, அரைக்காணி, என்பதைக் கால மாற்றத்தில் கைவிட்டுவிட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம்.

**கலைச்சொற்கள்:** தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையைவிட வேற்றுமொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவே தான் நம் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச்சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய கலைச்சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோ மொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம்.

**கடல்துறை:** உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியின் கடல்சார்ந்த சொற்களில் எறிதிரை, (எறுதிரான்), கலன் (கலயுகோய்), நீர், (நீரியோஸ்), நாவாய், (நாயு), தோணி (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இதுபோலப் பல்வேறு துறைசார்ந்த தமிழ்ச்சொற்களும் வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

**பா:**கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காணமுடிகிறது. பா வகைகளுள் ஒன்று வெண்பா. அதன் ஓசை செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் **சாப்போ** என அழைக்கப்படுகின்றன. பாவின் சுவைகளில் ஒன்று இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் **இளிகியா** என அழைக்கப்படுகின்றன.

**தமிழ்ச்சொற்கள் பிறமொழியில்:** கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடல் வழியாக வருவதனைக் கிரேக்க நூலொன்று விளக்குகிறது. எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ், என்னும் நூலின் பெயரிலேயே தமிழ்ச்சொல் எறிதிரை இருப்பதைக் காணலாம். கடல்சார்ந்த பெரிய புலம் என்பதே எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ், என ஆகியுள்ளது. இதுபோலத் தொல்தமிழின் வளர்ச்சி தொடரவும் நிலைக்கவும் நாம் செயல்படவேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**முடிவுரை**

வளர்ந்துகொண்டிருக்கும் அறிவியல் துறை கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ்மொழியில் மொழி பெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். பிறமொழியிலுள்ள தத்துவம், அரசியல், மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம்மொழியில் புதிய புதிய சொல்வளம் பெருகவேண்டும்.

## II. சிறுவினா (பாட வினா)

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

**கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் பெற்றுள்ள மாற்றம்:**

- எறிதிரை - எறுதிரான்
- நாவாய் - நாயு
- கலன் - கலயுகோய்
- தோணி - தோணீஸ்

**2. வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| சாப்ட்வேர் | மென்பொருள் | சைபர்ஸ்பேஸ் | இணையவெளி |
| ப்ரௌசர் | உலவி | சர்வர் | வையக விரிவு வலை |
| க்ராப் | செதுக்கி | ஃபோல்டர் | உறை |
| கர்சர் | ஏவி அல்லது சுட்டி | லேப்டாப் | மடிக்கணினி |

### கற்பவை கற்றபின்

**1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களை அறிந்து எழுதுக.**

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கிளாஸ் | வகுப்பு | பென்சில் | கரிகோல் |
| புக் | புத்தகம் | பென் | தூவல் |
| ப்ளாக்போர்டு | கரும்பலகை | பவுண்டன்பென் | ஊற்று மைபேனா |
| நோட்டு | பாட ஏடு | பால்பாயின்ட் பென் | பந்துமுனை பேனா |

**2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**அருண்** : ஹலோ! நண்பா?
**நளன்** : **உன்னைப் பார்த்துப் பல வருடங்களாயிற்றே!**
**அருண்** : ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?
**நளன்** : ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?
**அருண்** : **நான் சேவியர் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக இருக்கிறேன்.**
**நளன்** : அந்தக் காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.
**அருண்** : **ரொம்ப மகிழ்ச்சி.**
**நளன்** : பை! பை!

| | |
|---|---|
| **ஹலோ** | அழைக்கிறேன் |
| **டென் இயர்ஸ்** | பத்து ஆண்டுகள் |
| **மல்ட்டி நேஷனல் கம்பெனி** | பன்னாட்டு நிறுவனம் |
| **பிராஜக்ட் மேனேஜர்** | திட்ட மேலாளர் |
| **காலேஜ்ல** | கல்லூரி, |
| **பஸ்டுஇயர்** | முதல் ஆண்டு |
| **பை! பை!** | வருகின்றேன் வருகின்றேன். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இலக்கணம்

# இயல் 1

கற்கண்டு

# தொடர் இலக்கணம்

## ஒரு மதிப்பெண் வினா (கூடுதல் வினா)

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் _________ என்கிறோம். **விடை: பயனிலை**
2. சொற்றொடர் எழுவதற்குக் காரணமாக அமைந்த பெயர்ச்சொல்லே _________ ஆகும். **விடை: எழுவாய்**
3. வெளிப்படையாகத் தெரியாத எழுவாய் _________ எழுவாய் என்று கூறப்படும். **விடை: தோன்றா**
4. வினைப் பயனிலைக்கு அடையாக வருவது _________ ஆகும். **விடை: வினையடை**
5. வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது _________ எனப்படும். **விடை: தன்வினை**
6. செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை _________ எனப்படும். **விடை: செய்வினை**

### II. தொடர் வகைளைப் பொருத்துக.

| | | | | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | நட | அ | தெரிநிலை வினையெச்சத்தொடர் | ஆ | எழுவாய்த் தொடர் |
| 2 | வந்தான் மன்னன் | ஆ | எழுவாய்த் தொடர் | இ | வினைமுற்றுத்தொடர் |
| 3 | உண்ணச் சென்றான் | இ | வினைமுற்றுத்தொடர் | அ | தெரிநிலை வினையெச்சத்தொடர் |
| 4 | நண்பா கேள் | ஈ | தெரிநிலைப் பெயரெச்சத் தொடர் | ஊ | விளித்தொடர் |
| 5 | பாடும் குயில் | உ | அடுக்குத்தொடர் | ஈ | தெரிநிலைப் பெயரெச்சத் தொடர் |
| 6 | பாம்பு பாம்பு | ஊ | விளித்தொடர் | உ | அடுக்குத்தொடர் |

### III. பயன்பாட்டுத் தொடர்களைப் பொருத்துக.

| | | | | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | அப்துல் நேற்று வந்தான் | அ | செய்வினைத் தொடர் | இ | தன்வினைத் தொடர் |
| 2 | கவிதா உரை படித்தாள் | ஆ | உணர்ச்சித் தொடர் | அ | செய்வினைத் தொடர் |
| 3 | குமரன் மழையில் நனைந்தான் | இ | தன்வினைத் தொடர் | உ | உடன்பாட்டுத் தொடர் |
| 4 | எவ்வளவு உயரமான மரம்! | ஈ | கட்டளைத் தொடர் | ஆ | உணர்ச்சித் தொடர் |
| 5 | பூக்களைப் பறிக்காதீர் | உ | உடன்பாட்டுத் தொடர் | ஈ | கட்டளைத் தொடர் |

### IV. குறு வினாக்கள் (பாட வினாக்கள்)

1. **செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக் காட்டுடன் எழுதுக.**

அ) பாட்டு பூங்குழலியால் பாடப்பட்டது.

'பாடு' என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.

ஆ) உரை கவிதாவால் படிக்கப்படுகிறது.

(படு, பட்டது, பெறு, பெற்றது என்பவை துணை வினைகளாக வரும்).

2. **வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.**

அ) வீணையோடு வந்தாள் - வேற்றுமைத் தொடர். (ஒடு - வேற்றுமை உருபு)

ஆ) கிளியே பேசு - விளித்தொடர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**1. செயப்படுபொருள் என்பது யாது?**

எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படு பொருள் ஆகும்.

**2. பெயரடை, வினையடை – விளக்குக.**

பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருவது பெயரடை ஆகும். **சான்று:** அன்பரசன் நல்ல பையன்.

வினைப் பயனிலைக்கு அடையாக வருவது வினையடை ஆகும். **சான்று:** மகிழன் மெல்ல வந்தான்.

## V. சிறு வினா (பாட வினா)

**1. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

**தன்வினை** : தன்வினை, பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.
**சான்று** : நன்றாகப் படித்தனர்.
**பிறவினை** : வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும்,
**சான்று** : ஆசிரியர் மாணவர்களைப் படிப்பித்தார்.

## கூடுதல் வினாக்கள்

**1. பதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்.**

➢ ஓர் எழுத்தோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தோ சேர்ந்து நின்று பொருள் தருவது பதம் எனப்படும்.
➢ பதம் (சொல்) இருவகைப்படும்.
➢ அவை பகுபதம், பகாபதம் ஆகும்.
➢ மொழி, கிளவி, சொல் என்பன பதத்தின் வேறு பெயர்கள் ஆகும்.

**2. பகுபதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

➢ பிரிக்கக் கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
➢ அது பெயர்ப் பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டு வகைப்படும்.

**3. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?**

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகிய ஆறும் பகுபதத்தின் உறுப்புகள் ஆகும்.

**4. எழுத்துப்பேறு என்றால் என்ன? எ.கா. தருக.**

➢ பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும்.
➢ பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு ஆகும்.

**எ.கா.** செய்யாதே = செய் + ய் + ஆ + த் + ஏ

செய் - பகுதி; ய் - சந்தி; ஆ - எதிர்மறை இடைநிலை; த் - எழுத்துப்பேறு; ஏ - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி.

| பொருத்துக : | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | எதிர்கால இடைநிலை | கிறு, கின்று, ஆ நின்று | **ப், வ், க்** |
| 2. | நிகழ்கால இடைநிலை | த், ட், ற், இன் | **கிறு, கின்று, ஆ நின்று** |
| 3. | இறந்தகால இடைநிலை | ஆ | **த், ட், ற், இன்** |
| 4. | எதிர்மறை இடைநிலை | ப், வ், க் | **ஆ** |

## கற்பவை கற்றபின்

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

**அ.** பதவியைவிட்டு நீக்கினான் - இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.

**விடை:** பதவியைவிட்டு நீங்கினான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஆ.** மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் - இத்தொடரைத் பிறவினைத் தொடராக மாற்றுக:
**விடை:** மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

**இ.** உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக:
**விடை:** உண்ணும் தமிழ்த்தேனே.

**ஈ.** திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரைச் செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக:
**விடை:** மூன்று மொழிக்குடும்பங்களாகத் திராவிட மொழிகள் பகுக்கப்பட்டுள்ளன.

**உ.** நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.
**விடை:** நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்.

**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.**

**அ.** மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.
**விடை:** மொழி பெயர்த்தான் **(தன்வினை)**
மொழி பெயர்ப்பித்தான் **(பிறவினை)**

**ஆ.** பதிவுசெய் - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.
**விடை:** அன்பரசன் வழக்கு பதிவு செய்தான் **(செய்வினை)**
அன்பரசனால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. **(செயப்பாட்டு வினை)**

**இ.** பயன்படுத்து - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.
**விடை:** ஆதி நூலகத்தைப் பயன்படுத்தினான் **(தன்வினை)**
ஆதி நூலகத்தைப் பயன்படுத்துவித்தான் **(பிறவினை)**

**ஈ.** இயங்கு - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.
**விடை:** கரோன் இயந்திரத்தை இயக்கினான் **(செய்வினை)**
இயந்திரம் கரோனால் இயக்கப்பட்டது **(செயப்பாட்டு வினை)**

**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**
(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவைக்)

**அ.** தமிழ் __________ கொண்டுள்ளது. **விடை: செவ்விலக்கியங்களைக்**
**ஆ.** நாம் __________ வாங்க வேண்டும். **விடை: தமிழிலக்கிய நூல்களை**
**இ.** புத்தகங்கள் __________ கொடுக்கின்றன. **விடை: வாழ்வியல் அறிவைக்**
**ஈ.** நல்ல நூல்கள் __________ நல்வழிப்படுத்துகின்றன. **விடை: நம்மை**

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**
(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

**அ.** எல்லோருக்கும் __________ வணக்கம். **விடை: இனிய**
**ஆ.** அவன் __________ நண்பனாக இருக்கிறான். **விடை: நல்ல**
**இ.** __________ ஓவியமாக வரைந்து வா. **விடை: பெரிய**
**ஈ.** __________ விலங்கிடம் பழகாதே. **விடை: கொடிய**

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.**
(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

**அ.** ஊர்தி __________ சென்றது. **விடை: மெதுவாகச்**
**ஆ.** காலம் __________ ஓடுகிறது. **விடை: வேகமாக**
**இ.** சங்க இலக்கியம் வாழ்க்கையை __________ காட்டுகிறது. **விடை: அழகாகக்**
**ஈ.** இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் __________ காட்டு. **விடை: பொதுவாகச்**

**6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

**அ.** நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் **(வினாத்தொடராக)**
**விடை:** நம் முன்னோர்கள் எதனோடு இயைந்த வாழ்வு நடத்தினர்?

**ஆ.** இசையின்றி அமையாது பாடல் **(உடன்பாட்டுத் தொடராக)**
**விடை:** இசையோடு அமைவது பாடல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இ. நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? **(கட்டளைத் தொடராக)**
**விடை:** நீ இதைச் செய்.

**7. வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**அ.** தா (உடன்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)
i) ஆன்ரா கைபேசியைத் தந்தாள் (உடன்பாட்டு வினைத் தொடர்)
ii) ஆன்ரா கைபேசியைத் தந்துவித்தாள் (பிறவினைத் தொடர்)

**ஆ.** கேள் (வினாத் தொடர்)
i) முகிலா பாடல் கேட்டாயா?

**இ.** கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர்)
i) நவீன் கொடுத்தான் (செய்தித் தொடர்)
ii) நவீன் கொடு (கட்டளைத் தொடர்)

**ஈ.** பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர்)
i) நிலா திருக்குறளை எழுதிப்பார்த்தாள். (செய்வினைத் தொடர்)
ii) திருக்குறள் நிலாவால் எழுதிப் பார்க்கப்பட்டது. (செயப்பாட்டு வினைத் தொடர்)
iii) நிலா திருக்குறளை எழுதிப் பார்ப்பித்தாள். (பிறவினைத் தொடர்)

**8. சிந்தனை வினா**

**அ) அவை யாவும் இருக்கின்றன.**
**அவை யாவையும் இருக்கின்றன.**
**அவை யாவும் எடுங்கள்.**
**அவை யாவையும் எடுங்கள்.**
**அவை யாவற்றையும் எடுங்கள்.**
**மேற்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

i) **அவை யாவும் இருக்கின்றன:** இச்சொற்றொடரானது தவறு. அவை அனைத்தும் இருக்கின்றன எனப் பன்மைப் பொருளில் உள்ளது.
ii) **அவை யாவையும் இருக்கின்றன:** இச்சொற்றொடரானது சரி. அவை அனைத்தும் இருக்கின்றன எனப் பன்மைப் பொருளில் சரியாக அமைந்துள்ளது.
iii) **அவை யாவும் எடுங்கள்:** இச்சொற்றொடரானது தவறு. 'யாவும்' என்பதற்குப் பொருந்தும் பயனிலை அமையவில்லை.
iv) **அவை யாவையும் எடுங்கள்:** இச்சொற்றொடரானது தவறு. 'யாவையும்' என்பதற்குப் பொருந்தும் பயனிலை அமையவில்லை.
v) **அவை யாவற்றையும் எடுங்கள்:** இச்சொற்றொடரானது சரி. 'எடுங்கள்' என்பதற்குப் பொருந்தும் செயப்படுபொருள் உள்ளது.

**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்கவிருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

**கல்விச் செய்திகள்**

**சிறுவர்களுக்கான கதைகள்**

விரைவில் உங்கள் இல்லத்திற்கு உலா வரவிருக்கும் **வார இதழ்**

**மாவட்ட செய்திகள்**

**ஆன்மீகம், அரசியல்**

**வேலைவாய்ப்புச் செய்திகள்**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

நாம் அன்றாடம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படும் தொடர்களில் சில.

| | தொடர் வகைகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| (i) | செய்தித் தொடர் | திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினர். |
| (ii) | வினாத் தொடர் | நேற்று ஏன் பள்ளிக்கு வரவல்லை? |
| (iii) | உணர்ச்சித் தொடர் | என்னே! தாஜ்மகாலின் அழகு. |
| (iv) | கட்டளைத் தொடர் | கவனமாகச் செல். |
| (v) | கலவைத் தொடர் | கமலா நன்றாகப் படித்ததால் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாள். |
| (vi) | செய்வினைத் தொடர் | கமலா படம் வரைந்தாள். |
| (vii) | செயப்பாட்டு வினைத்தொடர் | படம் கமலாவால் வரையப்பட்டது. |
| (viii) | தன்வினைத் தொடர் | இளவரசி இலக்கணம் கற்றாள். |
| (ix) | பிறவினைத் தொடர் | இளவரசி இலக்கணம் கற்பித்தாள். |
| (x) | நேர்கூற்றுத் தொடர் | தந்தை, "மகனே, நன்றாகப் படி" என்று கூறினார். |
| (xi) | அயற்கூற்றுத் தொடர் | கமலா இளவரசியிடம், தான் மறுநாள் ஊருக்குச் செல்வதாகக் கூறினாள். |

**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

தமிழ்மொழியில் தொடர் எழுவாய், செயப்படுபொருள் பயனிலை என்ற வரிசையில் அமையும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற வரிசையிலும் அமையும். இத்தொடரைப் போன்று ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்படும்போது மொழி மரபைப் பேணுகிறோம்.

## மொழியை ஆள்வோம்

**மொழி பெயர்க்க**

1. Linguistics - மொழியியலார்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழி ஆராய்ச்சியாளர்
4. Polyglot - பன்மொழி அறிவுடையார் / புலமையாளர்
5. Phonologist - ஒலியனியல் வல்லுநர்
6. Phonetics - ஒலிப்பியல்

**அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் _________ (திகழ்) **விடை: திகழ்கிறது**
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் _________ (கலந்துகொள்) **விடை: கலந்து கொள்வாள்**
3. உலகில் மூவாயிரம் மொழிகள் _________ (பேசு) **விடை: பேசப்படுகின்றன**
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ________ (செல்) **விடை: சென்றனர்**
5. தவறுகளைத் ________ (திருத்து) **விடை: திருத்தினான்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## வடிவம் மாற்றுக

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜுன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

### நூல் வெளியீட்டு விழா

நாள் : ஜுன் 21
காலை : பிற்பகல் 3.00 மணி
இடம் : பள்ளி அரங்கம்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
மருதூர்.

வரவேற்புரை
**தலைமையாசிரியர்** : ம.தமிழண்ணல்

தலைமையுரை & நூல் வெளியிடுபவர்
**கின்னஸ் சாதனையாளர் & முன்னாள் மாணவர்**

**ஒவியவர்மன்**

நூல் வெளியீடு
**மாணவி. பூங்குழலி படைத்த**
**'உள்ளங்கையில் உலகம்'**

ஏற்புரை
*பாட்டுக்கவி பொற்சுவை,*
**(மருதூர் பள்ளி மாணவி) ச. கனகவல்லி,**

***அனைவரும் வருக! தமிழமுதம் பருக!***

www.Padasalai.Net

### தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

1. இளமையில் கல்வி _________. **விடை: கற்க வேண்டும்**
2. சித்திரமும் கைப்பழக்கம் _________. **விடை: செந்தமிழும் நாப்பழக்கம்**
3. கல்லாடம் படித்தவரோடு _________. **விடை: சொல்லாடல் செய்யாதே**
4. கற்றோர்க்குச் சென்ற _________. **விடை: இடமெல்லாம் சிறப்பு**

## கடிதம் எழுதுக.

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

**நண்பனுக்குக் கடிதம்**

அஅஅ
30.06.2019

அன்புள்ள நண்பனுக்கு,

நான் இங்கு நலம். உன் நலமறிய ஆவல்!

பாரதி ... இந்தக் கடிதத்தின் நோக்கம் என்ன தெரியுமா? என் பிறந்த நாளன்று நீ எனக்குத் தந்த பரிசுப்பொருளை, சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை அன்று பிரித்துப் பார்த்து வியந்து போனேன்.

எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய, "கால் முளைத்த கதைகள்" புத்தகம் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இந்நூலைக் கற்று, நான் அறிந்து கொண்ட கருத்துகள் பலவாகும். உலகம் எப்படித் தோன்றியது? என்ற கேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. பல நூறு வருடங்கள் கடந்து விட்ட போதும் இந்தக்கதைகள் கூழாங்கற்களைப் போல் வசீகரமாக இருக்கின்றன.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு திருப்பத்தையும் வியப்பையும் ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. அரியதொரு இந்நூலை எனக்குப் பிறந்தநாள் பரிசாக அளித்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மற்றவை நேரில்

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
அஅஅஅ.

**உறை மேல் முகவரி :**

பெறுநர்: அஞ்சல் தலை
ந.பாரதி,
18, தெற்கு மாசி வீதி,
மதுரை.

## நயம் பாராட்டுக

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

**– ம. இலெ. தங்கப்பா**

### முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் ம. இ. லெ. தங்கப்பா. எளிய சொற்களால் அரிய கருத்துகளை அழகுறப் பாடுவதில் வல்லவர். இயற்கை அழகை எளிய நடையில் நம்கண்முன்னே படம் பிடித்துக் காட்டியுள்ள இக்கவிதையைப் படித்து அதிலுள்ள நயங்களைப் பாராட்டுவோம்.

### திரண்ட கருத்து:

வாழைக்குக் குருத்தழகு
பாடலுக்குக் கருத்தழகு

பரந்து விரிந்த நீலவானிலும், ஆர்ப்பரிக்கும் ஆரவாரமிக்க கடலலைப் பரப்பிலும், விண்ணை முட்டிநிற்கும் அரிய பெரிய மலைகளிலும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளிலும், எங்கும் வற்றாது ஓடும் நீரருவியிலும், அடர்ந்த மரங்களும் பசுமைநிறைப் புல்வெளிகளிலும், வளமிகு வயல்களிலும், விலங்கு, பறவைகளிலும் மட்டுமல்லாது காணும் பொருட்களிலெல்லாம் நிறைந்த மனதிலும் தெவிட்டிடாத பாட்டே, தூய்மையான ஊற்றே, அழகு என்னும் அழகிய ஒழுங்காய் அமைந்த பேரொழுங்கே மக்களின் உடலிலும் உள்ளத்திலும் நிலையாய் என்றும் குடியிருக்க வேண்டுகிறேன்.

### மையக்கருத்து

இயற்கை அழகை அழகுறக் காட்டுவதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

### தொடை நயம்

தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்

### மோனைத் தொடை

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும்.

(எ.கா) விரிகின்ற ... விண்ணோங்கு ... அடிமோனை
தெரிகின்ற ... தெவிட்டாத ....



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**எதுகைத் தொடை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

(எ.கா) புல்வெளியில், நல்வயலில் - சீர் எதுகை

**முரண் தொடை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முரண்பாடான சொல்லோ, பொருளோ வருவது முரண் தொடை ஆகும்.

(எ.கா) மலையில், பள்ளத்தில் ... முரண்தொடை
நெடுவானில், கடற்பரப்பில் ...

**சொல் நயம்**

அர்ச்சுனனுக்கு வில்லு
பாடலுக்குச் சொல்லு

விரிகின்ற நெடுவானில், விண்ணோங்கு பெருமலையில், புனலருவிப் பொழிலில் ... போன்ற சொற்றொடர்களில் சொல் நயம் அழகுற அமைந்திருப்பதைக் காணலாம்.

**சுவை நயம்**

**நாவிற்கு அறு சுவை**
**பாடலுக்கு எண் சுவை**
நகை, அழுகை, இளிவரல், மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப ...

என்பதற்கேற்ப இப்பாடலில் இயற்கையின் பெருமையை அழகுறப் பாடியிருப்பதனால் பெருமிதச் சுவை அமைந்துள்ளது.

**அணிநயம்**

கோவிலுக்கு மணி அழகு
செய்யுளுக்கு அணி அழகு

உள்ளதை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி ஆகும்.

விரிகின்ற நெடுவானில், விண்ணோங்கு பெருமலையில் என்ற சொற்றொடர்களில் உயர்வு நவிற்சியணி அமைந்துள்ளதைக் காணலாம்.

**முடிவுரை:**

கவிஞர் ம. இலெ. தங்கப்பா எழுதிய இப்பாடலில் பொருள் நயம், தொடை நயம், சொல் நயம், சுவை நயம், அணி நயம், என அத்தனை நயங்களும் அழகுறவே அமைந்துள்ளதால், இப்பாடலைக் கற்போர் கேட்போர் செவிகளில் நறுந்தேனாகப் பாயும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை,

## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க

உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

### உலகத் தாய்மொழி நாள் விழா

**இடம்** : பாவாணர் அரங்கம்
**நாள்** : பிப்ரவரி 21, 2019
**காலம்** : மாலை 5.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| இறைவணக்கம் | : | **செல்வன். இளமுகில்** |
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | **செல்வி. தமிழரசி** |
| கொடிப்பாடல் | : | **எல்லோரும்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | **ச. சித்திரைவேல்** |
| தலைமையுரை | : | **புலவர் வெற்றி கொண்டான்** |
| சிறப்புரை | : | **நாவலர் பொன்னரசன்** |
| கலைநிகழ்ச்சிகள் | : | **மாணவர்கள்** |
| பரிசு வழங்கல் | : | **தலைவர் அரங்கண்ணல் அவர்கள்** |
| நன்றியுரை | : | **செல்வன் கலைமுரசு** |
| நாட்டுப்பண் | : | **எல்லோரும்** |

## மொழியோடு விளையாடு

**1. அந்தாதிச் சொற்களை உருவாக்குக. விருது, குருவி, அத்தி, இனிப்பு**

விருது, துடுப்பு, புதுசு, சுக்கு, குத்து, தும்பை, பைரவி, விருந்து, துண்டு

குருவி, விளக்கு, குரங்கு, குறும்பு, புங்கை, கைதி, திகைப்பு, புத்தி, திண்ணை

அத்தி, திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைபேசி, சிறப்பு, புதுமை, மைனா

இனிப்பு, புளிப்பு, புதியது, துணிவு, உடைமை, மைஞ்சு, சுக்கு, கும்மி, மிக்கவை

### அகராதியில் காண்க

| | | |
|---|---|---|
| நயவாமை | - | விரும்பாமை, புகழாமை |
| கிளத்தல் | - | தெளிவாகக் கூறுதல் / வியந்து கூறுதல் |
| கேழ்பு | - | நன்மை |
| செம்மல் | - | தலைவன், இறைவன், வீரன் |
| புரிசை | - | மதில், மதில்சுவர் |

**கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| **நான்** | வந்தேன் | **வருகிறேன்** | **வருவேன்** |
| **நாங்கள்** | **வந்தோம்** | **வருகிறோம்** | வருவோம் |
| **நீ** | **வந்தாய்** | வருகிறாய் | **வருவாய்** |
| **நீங்கள்** | வந்தீர்கள் | **வருகின்றீர்கள்** | **வருவீர்கள்** |
| **அவன்** | **வந்தான்** | வருகிறான் | **வருவான்** |
| **அவள்** | **வந்தாள்** | **வருகிறாள்** | **வருவாள்** |
| **அவர்** | வந்தார் | **வருகிறார்** | **வருவார்** |
| **அவர்கள்** | **வந்தார்கள்** | **வருகிறார்கள்** | **வருவார்கள்** |
| **அது** | **வந்தது** | **வருகிறது** | வரும் |
| **அவை** | **வந்தன** | வருகின்றன | **வரும்** |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**

| | தா | | | காண் | | |
|---|---|---|---|---|---|---|
| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | தந்தேன் | தருகிறேன் | தருவேன் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| நாங்கள் | தந்தோம் | தருகிறோம் | தருவோம் | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் |
| நீ | தந்தாய் | தருகிறாய் | தருவாய் | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் |
| நீங்கள் | தந்தீர்கள் | தருகின்றீர்கள் | தருவீர்கள் | கண்டீர்கள் | காண்கிறீர்கள் | காண்பீர்கள் |
| அவன் | தந்தான் | தருகிறான் | தருவான் | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| அவள் | தந்தாள் | தருகிறாள் | தருவாள் | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| அது | தந்தது | தருகிறது | தரும் | கண்டது | காண்கிறது | காணும் |
| அவர் | தந்தார் | தருகிறார் | தருவார் | கண்டார் | காண்கிறார் | காண்பார் |
| அவர்கள் | தந்தார்கள் | தருகிறார்கள் | தருவார்கள் | கண்டார்கள் | காண்கிறார்கள் | காண்பார்கள் |
| அவை | தந்தன | தருகின்றன | தரும் | கண்டன | காண்கின்றன | காணும் |

| | பெறு | | | நீந்து | | |
|---|---|---|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
| நான் | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| நாங்கள் | பெற்றோம் | பெறுகிறோம் | பெறுவோம் | நீந்தினோம் | நீந்துகிறோம் | நீந்துவோம் |
| நீ | பெற்றாய் | பெறுகிறாய் | பெறுவாய் | நீந்தினாய் | நீந்துகிறாய் | நீந்துவாய் |
| நீங்கள் | பெற்றீர்கள் | பெறுகிறீர்கள் | பெறுவீர்கள் | நீந்தினீர்கள் | நீந்துகிறீர்கள் | நீந்துவீர்கள் |
| அவன் | பெற்றான் | பெறுகிறான் | பெறுவான் | நீந்தினான் | நீந்துகிறான் | நீந்துவான் |
| அவள் | பெற்றாள் | பெறுகிறாள் | பெறுவாள் | நீந்தினாள் | நீந்துகிறாள் | நீந்துவாள் |
| அது | பெற்றது | பெறுகிறது | பெறும் | நீந்தியது | நீந்துகிறது | நீந்தும் |
| அவர் | பெற்றார் | பெறுகிறார் | பெறுவார் | நீந்தினார் | நீந்துகிறார் | நீந்துவார் |
| அவர்கள் | பெற்றார்கள் | பெறுகிறார்கள் | பெறுவார்கள் | நீந்தினார் | நீந்துகிறார்கள் | நீந்துவார்கள் |
| அவை | பெற்றன | பெறுகின்றன | பெறும் | நீந்தின | நீந்துகின்றன | நீந்தும் |

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)**

**(எ.கா)** நான் திடலில் ஓடினேன் **(தன்வினை)**
திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் **(பிறவினை)**

| எழுவாய்/பெயர் | வினை அடி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| நான் | ஓடு | **ஓடினேன்** | **ஓட்டினேன்** |
| காவியா | வரை | **வரைந்தாள்** | **வரைவித்தாள்** |
| கவிதை | நனை | **நனைந்தேன்** | **நனைவித்தேன்** |




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | | |
|---|---|---|---|
| இலை | அசை | **அசைந்தது** | **அசைவித்தது** |
| மழை | சேர் | **சேர்ந்தது** | **சேர்ப்பித்தது** |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



முடியுமோ முடியாதோ என்ற எண்ணமில்லை
முயற்சியே இங்கு வெற்றிவாகை சூடுகிறது.
கட்டுகளுக்குள்ளேயே சிக்கிக் காலங்கழிக்காமல்
தன்னந்தனியாய்த் தானே முயன்று துள்ளிக் குதிக்கிறது
தனிக்காட்டு ராஜாவாக வலம் வர

## நிற்க அதற்குத் தக...

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| **திங்கள்** | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| **செவ்வாய்** | **முதலில் பார்க்கும் போது அனைவரிடமும் வாழ்க வளமுடன்.... என்று கூறினேன். பெரியோர்களின் வாழ்த்துகளைப் பெற்றேன்.** |
| **புதன்** | **பேருந்தில் பயணம் செய்யும் போது நான் எழுந்து, முதியவர் ஒருவருக்கு என் இருக்கையைக் கொடுத்தேன், நடத்துநரின் பாராட்டைப் பெற்றேன்.** |
| **வியாழன்** | **மாலையில் பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது, என் தங்கையின் பள்ளிப்பையையும் சேர்த்து சுமந்து வந்தேன். என் தங்கையின் அன்பைப் பெற்றேன்.** |
| **வெள்ளி** | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| **சனி** | **என் பாட்டியின் மூக்குக் கண்ணாடியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தேன். எனக்கு மிகவும் பிடித்தமான தின்பண்டம் கிடைத்தது.** |
| **ஞாயிறு** | **என் தாத்தாவின் மிதிவண்டிக்குக் காற்று அடைத்துக் கொடுத்தேன்.<br>என் அப்பாவிடம் என்னைப் பற்றிக் கூறி வெகுவாகப் பாராட்டினார்.** |

## கலைச்சொல் அறிவோம்

**உருபன்** : Morpheme
**ஒலியன்** : Phoneme
**ஒப்பிலக்கணம்** : Comparative Grammar
**பேரகராதி** : Lexicon

☼☼☼☼

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com